அம்பத்தூர்மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RLTOP: 15/2022

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.P.காயத்திரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

ம.சா.1 20.08.2025

பெயர் லட்சுமி தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. தாவா சொத்து யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்றால் மல்லிகா என்பவர் எனது கணவருக்கு பவர் கொடுத்திருந்தார். எனது கணவர் எனது பெயருக்கு வீட்டை பதிவு செய்தார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்கூறிய விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சரியாக தெரியவில்லை. இந்த வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் விவரம் சரியாக தெரியவில்லை. வீட்டில் வாடகைக்கு இருப்பவர்கள் வீட்டை காலிசெய்யாததால் இந்த மனு தாக்கல் செய்துள்ளேன்.

2. வாடகைக்கு இருப்பவர்கள் எந்த பகுதியில் வீட்டில் குடியிருக்கிறார்கள் மற்றும் எத்தனை சதுரஅடியில் உள்ளார்கள் என்றால் அந்த விவரம் எனது

கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்து எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றேன் என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். நான் கிரையம் பெற்ற போது கிரையம் தகவலையை மல்லிகா என்பவருக்கு சொன்னேனா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். மல்லிகா என்பவர் என்மீதும் எனது கணவர் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. மல்லிகா என்பவர் என்மீதும் எனது கணவர் மீதும் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியும். தாவா சொத்தில் எதிர்மனுதாரர் எந்த பகுதியில் குடியிருக்கிறார் என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் ஆமாம். எனவே தான் வழக்கறிஞர் அறிவிப்பில் அதைபற்றி சரியாக விவரிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் ஆகிய நான் எனது மனுவில் தாவா சொத்தில் முதல்தளத்தில் வசிப்பதாக சொல்லிவிட்டு நிருபணவாக்குமூலத்தில் கீழ்தளத்தில் வசிபதாக முரணாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு விவரம் தெரியாது எனது கணவருக்கு தான் தெரியும். எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாது நிலையில் எனது கணவர் என் மூலமாக மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4. எதிர்மனுதாரர் இன்றைய தேதி வரை மல்லிகா என்பவரிடம் வாடகை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் மல்லிகா என்பவர் தொடர்ந்து வாடகை வாங்கி வருகிறார் என்ற விவரம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மல்லிகா மற்றும் அவரது மகள் தான் தொடர்ந்து தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும் அது சம்மந்தமாக பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் என்பெயரில் கிரையம் பெற்ற 5 வருடத்திற்கு பிறகு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5. எனது மனுவில் மல்லிகா என்பவர் தான் 2 மாததில் வீட்டை காலிசெய்து தருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எதிர்மனுதாரர் வீட்டை காலிசெய்து தருவது சம்மந்தமாக எந்த குறிப்பும் இல்லை என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் என்னுடமன் வாடகை ஒப்பந்தம் செய்வதற்கு எந்த காலத்திலும் உறுதி அளிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. மல்லிகா வீட்டை காலிசெய்து தராதது சம்மந்தமாக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கு தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மல்லிகா கொடுத்த உறுதியை மீரிவிட்டார் என்று அவர் மீது வேறு நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால் என் கணவருக்கு தான் தெரியும்.

6. எதிர்மனுதாரர் முறையாக வாடகை செலுத்தி வருகிறார் என்றாலும் அது சம்மந்தமாக பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும் எனவே எதிர்மனுதாரரை வீட்டை விட்டு காலிசெய்ய சொல்லும் அதிகாரம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.